# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2025 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

---

### பகுதி A

### வினா இல. 01

இல. **1.1** தொடக்கம் **1.10** வரை தரப்பட்ட வினாக்களில் கொடுக்கப்பட்ட விடைகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யும்படி கேட்கப்பட்டதுடன், இல. **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்ட கூற்றுக்கள் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. மேலும், இல. **1.16** தொடக்கம் **1.20** வினாக்களுக்கு சரியான விடை அளிக்குமாறு கேட்கப்பட்டது.

இவ்வினாவில் காணப்பட்ட ஒவ்வொரு உப பிரிவுகளுக்கும் பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளில் இருந்த பொதுவான வழுக்கள் / பலவீனங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன :

**1.1** இவ்வினா "தொடர்ந்தியங்கும் கோட்பாடு" என்ற எண்ணக்கரு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இது ஒரு அடிப்படை வினாவாக இருந்தபடியால் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளிடம் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய அறிவு காணப்படாததை அவதானிக்க முடிந்தது.

**1.2** இவ்வினா வணிக உரிமமொன்றின் நாட்டதாரர் / நாட்டதாரர்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.3** தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில், குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக, மோட்டார் வாகனத்திற்கான தேய்மானக் கட்டணத்தைக் கணிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி தேய்மானத்தைக் கணிப்பிடுவது பற்றி போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. இதனால் சரியான விடை இலக்கமான (2) இற்குப் பதிலாக விடை இல. (1) அல்லது (4) இனைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.4** இங்கு, தரப்பட்ட அடிப்படை ஊடுசெயல்களின் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் விடை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் விடை இல. (1) இற்குப் பதிலாக விடை இல. (2) அல்லது (4) இனை அளித்திருந்தனர்.

**1.5** தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில், வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.6** தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2024 மார்ச் 31 இலான மொத்தச் சொத்துகளை கணிப்பிட அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.7** கிரயத்தில் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் எது குறைந்ததோ அதில் பெறுமதியிடப்படும் தொக்குடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிக் கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் முன்னெச்சரிக்கை எண்ணக்கரு என கணக்கீட்டு எண்ணக்கருவை இனங் கண்டிருந்தனர். ஏனையவர்கள் சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.8** அலுவலக வாடகையின் மாதாந்தக் கொடுப்பனவு காரணமாக கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் சரியான தாக்கத்தைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.9** இவ்வினா கட்டுப்பாட்டுக் கணக்குகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிட்ட அளவிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.10** இங்கு, தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சீராக்கப்பட்ட காசு மீதியைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியான விடையை அளித்திருந்தனர்.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரை தரப்பட்ட கூற்றுக்கள் **''சரியானதா''** அல்லது **''தவறானதா''** எனக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

**1.11** பொதுக் கணக்கீட்டு மென்பொருளுக்கான உதாரணம் தொடர்பில் தரப்பட்ட கூற்று சரியானதா, தவறானதா எனக் கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் ACCPAC ஆனது ஒரு பொதுக் கணக்கீட்டு மென்பொருள் எனச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.12** இவ்வினாவில் நிதி நிலைக் கூற்று தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தைச் சரியாக விளங்கிக்கொண்டு, ''தவறானது'' என்ற சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.13** இது வங்கிக் கூற்று மீதி பற்றிய ஓர் அடிப்படை வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் ''தவறானது'' என்ற சரியான விடையைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.14** தரப்பட்ட கூற்றானது கணக்கீட்டுச் செயன்முறை பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் ''தவறானது'' என்ற சரியான விடையை அளித்திருந்தனர்.

**1.15** இந்த வினா கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்களால் பின்பற்றப்படும் ஒழுக்கநெறிக் கோட்பாடுகளுடன் தொடர்புடையதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒருமைப்பாடு என்பது ஒழுக்கநெறிக் கோட்பாடொன்றென இனங்கண்டு, ''சரியானது'' என்ற சரியான விடையைக் குறிப்பிட்டிருந்தனர்.

இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கு விடையெழுதுமாறு இங்கு கேட்கப்பட்டது.

**1.16** இங்கு, நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைத்துவக் கணக்கீட்டிற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.17** நிதிக் கணக்கீட்டில் ''வருமானம்'' என்னும் பதத்தை வரையறுக்குமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் அதனைச் சரியாக வரையறை செய்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பூரணமான வரைவிலக்கணத்தை எழுதியிருக்கவில்லை.

**1.18** நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அட்டுறு எண்ணக்கரு எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது என்பதற்கான இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.19** ''உரிம எண்ணக்கரு'' இனைச் சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விபரித்திருந்தனர்.

**1.20** தரப்பட்ட ஊடுசெயல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. பகுதி **(a)** இற்கான விடை நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு என்பதை அதிகளவானவர்கள் தெரிவித்திருந்தனர். பகுதி **(b)** இற்கான விடை விற்பனை விலைப்பட்டியல் என்பதை அதிகளவானவர்கள் தெரிவிக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பகுதி **(b)** இற்கான விடையான விற்பனை விலைப்பட்டியல் என்பதற்குப் பதிலாக கொள்வனவு விலைப்பட்டியல் என எழுதியிருந்தனர்.

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதி 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வினாவும் 10 புள்ளிகளுக்கு உரியவை.

### வினா இல. 02

இவ்வினா **(a), (b)** என இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. பகுதி **(a)** ஆனது கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது தரப்பட்ட ஊடுசெயல்களின் தாக்கம் பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதலைப் பரீட்சித்தது. மேலும் பகுதி **(b)** ஆனது முதன்மை பதிவேடு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதாவது விற்பனை நாட்குறிப்பேடு.

அதிகளவான பரீட்சார்த்திகள் தமது விடைகளை திருப்திகரமான முறையில் சமர்ப்பித்திருந்த போதிலும், பொதுவாக கீழ்வரும் பலவீனங்களும் வழுக்களும் இனங்காணப்பட்டன:

**பகுதி (a)**

(1) சில பரீட்சார்த்திகள் கணக்கீட்டுச் சமன்பாடு பற்றிய அடிப்படை அறிவைக் கொண்டிருக்க வில்லை என்பதுடன் சிலர் ஒவ்வொரு ஊடுசெயலுக்கும் வினாத்தாளில் தரப்பட்ட சமன்பாட்டை எழுதியிருந்தனர்.

(2) பகுதி **(a)** இன் மூன்றாவது ஊடுசெயலில், சில பரீட்சார்த்திகள் கடை வாடகைக் கொடுப்பனவை உரிமையாண்மையில் இருந்து கழிப்பதற்குப் பதிலாக பரிப்பிலிருந்து கழித்திருந்தனர்.

(3) பகுதி **(a)** இன் நான்காவது ஊடுசெயலில், சில பரீட்சார்த்திகள் பரிப்புக்குப் பதிலாக உரிமையாண்மையில் இருந்து வியாபாரக் கடன்கொடுத்தோரைக் கழித்திருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் ஊடுசெயல்களுடன் தொடர்புடைய சமன்பாட்டில் ஒவ்வொரு உருப்படியும் தொடர்பான தாக்கத்தைக் குறிப்பிடாது மொத்தச் சொத்துகள் மற்றும் பரிப்புகளின் அதிகரிப்பு அல்லது குறைவு பற்றி மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (b)**

(1) அதிகளவான பரீட்சார்த்திகளிடம் வியாபாரக் கழிவு பற்றிய சரியான அறிவு காணப்படாததை அவதானிக்க முடிந்தது. இதனால், வியாபாரக் கழிவுகளைக் கழித்ததன் பின்னர் நிகர விற்பனைப் பெறுமதியை அவர்களால் கணிப்பிட முடியவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் வியாபாரக் கழிவை VAT ஆகப் பெயரிட்டிருந்தனர்.

(3) பல பரீட்சார்த்திகள் விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தத்தை உள்ளடக்கியிருக்கவில்லை.

(4) பல எண்கணித வழுக்கள் அவதானிக்கப்பட்டன.

### வினா இல. 03

பரீட்சை மீதி தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையும் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

(1) சில பரீட்சார்த்திகள் தனிப்பட்ட பேரேட்டுக் கணக்குகளில் இருந்து இறுதி மீதியைப் பிரித்தெடுத்து பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

(2) பரீட்சை மீதியின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய தொகைகள் அதன் செலவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(3) கடன் விற்பனைகளும் கடன் கொள்வனவுகளும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஊடாகச் சரியாக கணிப்பிடப்படவில்லை.

(4) காசு விற்பனைகள், கடன் விற்பனைகள் மற்றும் காசுக் கொள்வனவுகள், கடன் கொள்வனவுகள் என்பன பரீட்சை மீதியில் தனித்தனி உருப்படிகளாகக் காட்டப்பட்டிருந்தன.

(5) மோட்டார் லொறிக்கான தேய்மானத் தொகையானது காலப்பகுதிக்காக 3 மாதங்களைக் கவனத்திற் கொண்டு, சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(6) காப்புறுதிச் செலவினம் மற்றும் மின்சாரச் செலவினம், காலப்பகுதிக்கான அலுவலக வாடகை என்பன முறையே முற்கொடுப்பனவுகள் மற்றும் அட்டுறு செலவினங்களுடன் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

### வினா இல. 04

இந்த வினா 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்திக் கிரயக் கணக்குகளை தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்ததுடன் கீழ்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன:

(1) சரியான வடிவம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(2) அதிகளவான பரீட்சார்த்திகள் முதன்மைக் கிரயம் மற்றும் மேந்தலைக் கிரயங்கள் பற்றிய புரிதலைக் கொண்டிருக்காததால், அவற்றை அவர்கள் வேறுபடுத்தியிருக்கவில்லை.

(3) புத்துருவாகும் வேலைச் சீராக்கங்களை முதன்மைக் கிரயத்திற்கு சீராக்கம் செய்யாது மேந்தலைக் கிரயத்திற்குச் செய்திருந்தனர்.

(4) தரப்பட்ட சதவீதங்களைப் பயன்படுத்தி, தொழிற்சாலை மற்றும் அலுவலகத்திற்கிடையில் மேந்தலைச் செலவினங்கள் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(5) அதிகளவான பரீட்சார்த்திகள் மோட்டார் லொறித் தேய்மானம் போன்ற உற்பத்திக் கிரயங்களைக் கணிப்பதற்கு சம்பந்தமற்ற செலவினங்களைப் பயன்படுத்தியிருந்தனர்.

(6) நுகரப்பட்ட மூலப்பொருள்கள், முதன்மைக் கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயம் போன்றவை கணிப்பிடப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடப்படவில்லை.

(7) உற்பத்திக் கிரயம் மீதான 15% இலாப எல்லையானது துல்லியமாகக் கணிப்பிடப்படவில்லை.

## வினா இல. 05

இவ்வினா **(a), (b)** என இரண்டு பகுதிகளைக் கொண்டது. **பகுதி (a)** ஆனது வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குமாறு கேட்டிருந்ததுடன் **பகுதி (b)** ஆனது தொங்கற் கணக்கைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்திகரமான மட்டத்தில் விடைகளை வழங்கியிருந்தனர் ஆயினும் கீழ்வரும் பொதுவான பலவீனங்களையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது :

**பகுதி (a)**

(1) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(2) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதும்போது நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுடன் தொடர்புடைய வரவு மற்றும் செலவுத் தொகைகள் பக்கம் மாறி எழுதப்பட்டிருந்தன.

(3) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்கும்போது, நாட்குறிப்பேட்டில் உள்ள பரிவர்த்தனைகளுக்கு முன்னால் வரவு மற்றும் செலவு என்ற பதங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(4) அதிகமான பரீட்சார்த்திகள் ஒவ்வொரு நாட்குறிப்பேட்டுப் பதிவுகளிலும் காசேட்டைக் குறிப்பிட்டிருந்தனர்.

(5) தொங்கற் கணக்கின் ஊடாக சரிசெய்யப்பட வேண்டிய வழுக்கள் இனங்காணப்படவில்லை.

(6) உருப்படி (2) தொடர்பான வழுவைச் சரியாக இனங்காணாது நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ரூபா 3,500/- மற்றும் ரூபா 5,300/- ஆகிய பெறுமானங்களின் வித்தியாசமான ரூபா 1,800/- இனைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக மேற்படி இரு பெறுமானங்களும் நாட்குறிப்பேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(7) அலுவலகப் பராமரிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள ரூபா 250,000/- பெறுமதியான கணினி ஒன்றின் கொள்வனவைக் குறிக்கும் பதிவு இல. 04 உடன் தொடர்புடைய நாட்குறிப்பேட்டுத் திருத்தமானது சரியாகப் பதிவு செய்யப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் அலுவலக உபகரணக் கணக்கிற்குப் பதிலாக கொள்வனவுக் கணக்கில் வரவுப் பதிவு செய்திருந்தனர்.

(8) சில பரீட்சார்த்திகள் வட்டிச் செலவினமாகக் கிடைக்கப்பெற்ற செலுத்த வேண்டிய பாதுகாப்புக் கட்டணப் பட்டியல் சீராக்கத்தின் கணக்கீட்டுடன் தொடர்புடைய நாட்குறிப்பேட்டுப் பதிவுகளின் திருத்தத்தைச் சரியாக இனங்காணத் தவறியிருந்தனர்.

**பகுதி (b)**

தொங்கற் கணக்கைத் தயாரிக்கும்போது கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) தொங்கற் கணக்கில் உள்ள ஆரம்ப செலவு மீதி, அந்தக் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், தொங்கற் கணக்கின் ஆரம்ப செலவு மீதி பதிவு செய்யப்படவில்லை.

(2) தொங்கற் கணக்கிற்கு வரவுப் பதிவு செய்யப்பட வேண்டிய பதிவுகள் செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

<u>பகுதி C</u>

**வினா இல. 06**

இவ்வினா **(a), (b)** என இரு பகுதிகளைக் கொண்டது. **பகுதி (a)** இல் முற்றடக்க வருமானக் கூற்றைச் சமர்ப்பிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்ட அதே வேளை, **பகுதி (b)** இல் நிதி நிலைக் கூற்றின் சமர்ப்பிப்பு பரீட்சிக்கப்பட்டது. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.

பொதுவாக அவதானிக்கப்பட்ட வழுக்கள் மற்றும் விடுபாடுகள் கீழ்வருமாறு:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் மொத்த இலாபத்தைக் கணிப்பிடும்போது, வருட ஆரம்பத்தில் உள்ள ஆரம்ப இருப்பைக் கழித்து, இறுதி இருப்பைக் கூட்டியிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் வருமானக் கூற்றைத் தயாரிக்கும்போது, தேய்மானத்தைச் சரியாகக் கழித்திருந்த போதிலும், ஒவ்வொரு சொத்து வகுப்புக்குமான தேய்மானத்தைத் தனித்தனியாகக் காட்டாது, மொத்தத் தேய்மானத் தொகையை மாத்திரம் காட்டியிருந்ததுடன், சிலர் தேய்மானத்தை முற்றடக்க வருமானக் கூற்றிற்கு எடுத்திருக்க வில்லை.

(3) ஆண்டின் காலப்பகுதியில் அறவிடமுடியாக் கடனாக ரூபா 100,000/- பதிவழிப்புச் செய்யப்பட்டதுடன் அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடு பதிவு செய்யப்படவில்லை.

(4) வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடத்தின் உரிமையாளருக்குச் செலுத்தப்பட்ட மீளளிக்கத்தக்க வைப்புத்தொகை ரூபா 600,000/- ஆனது அலுவலகச் செலவினங்களில் இருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் அது நிதி நிலைக் கூற்றில் மீளளிக்கத்தக்க வைப்பொன்றாக காட்டப்பட்டிருந்தது எனினும் வருமானக் கூற்றில் ஆண்டிற்கான செலவினம் ஒன்றாகப் பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(5) வங்கிக் கடன்கள் மீதான வட்டி கணிப்பிடப்பட்டு, ஒரு மாதத்திற்கானது மாத்திரம் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் ஆண்டு முழுவதற்குமான வட்டியைக் காட்டியிருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள் விற்பனைத் தரகுச் செலவினங்களை வருமானமாக இனங்கண்டிருந்தனர்.

(7) கட்டடத்தின் தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் காணிப் பெறுமதியைக் கழிக்காது காணி மற்றும் கட்டடம் ஆகிய இரண்டிற்குமான பெறுமதிக்கு தேய்மானத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

(8) முற்றடக்க வருமானக் கூற்றில், பரீட்சை மீதியின் உருப்படிகள் ஆயிரங்களில் காட்டப்பட்டிருந்ததுடன், சீராக்கங்களுடன் தொடர்புடைய உருப்படிகளின் பெறுமானங்கள் முழுமையான பெறுமானங்களில் காட்டப்பட்டிருந்தன.

(9) முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய போதிய அறிவின்மையால், நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(10) முற்றடக்க வருமானக் கூற்று பரிந்துரைக்கப்பட்டுள்ள வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் செலவினங்களைச் சரியாக வகைப்படுத்துவது பற்றிய அறிவையும் கொண்டிருக்கவில்லை.

(11) பரீட்சார்த்திகள் விற்பனை, விநியோகச் செலவினங்கள் மற்றும் நிருவாகச் செலவினங்களின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய தொடர்புடைய செலவினங்களை சரியாக இனங்காணுதல் வேண்டும்.

(12) நிருவாகச் செலவினங்கள், விநியோகச் செலவினங்கள் மற்றும் நிதிச் செலவினங் களுக்கான விபரமான செய்முறைகள் சில பரீட்சார்த்திகளால் இணைக்கப்படவில்லை. எனவே அவர்களால் புள்ளிகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) திரண்ட தேய்மானத்திற்குப் பதிலாக ஆண்டிற்கான தேய்மானம் பதிவு செய்யப் பட்டிருந்தது.

(2) சில பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு மற்றும் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு ஆகியன பற்றிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன் மற்றும் வியாபார வருமதிகள் மீதியிலிருந்தான அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு ஆகியவற்றைக் கழித்திருக்கவில்லை.

(3) அட்டுறு மின்சாரம், விற்பனைத் தரகு மற்றும் வங்கிக் கடன் வட்டி ஆகியவற்றுடன் தொடர்புடைய பெறுமானங்கள் நிதி நிலைக் கூற்றில் உள்ள நடைமுறைப் பரிப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படவில்லை.

(4) வங்கிக் கடன் ஆனது நடைமுறையல்லாப் பரிப்புக்களுக்குப் பதிலாக நடைமுறைப் பரிப்புக்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) அலுவலக வாடகைக்கான மீளளிக்கத்தக்க வைப்புத்தொகை நடைமுறைச் சொத்துகளின் கீழ் பதிவு செய்யப்படவில்லை.

(6) நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய அடிப்படைப் புரிதல் இன்மையால் கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப இருப்பு, வாடகைச் செலவினம் மற்றும் பிற செலவினங்கள் நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(7) சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில் உருப்படிகளை வகைப்படுத்தாது அனைத்து உருப்படிகளையும் ஒன்றாகப் பதிவு செய்திருந்தனர்.

எடுத்துக்காட்டு: - நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், மூலதனமும் பரிப்புக்களும், நடைமுறைப் பரிப்புக்கள்.

(8) வியாபார வருமதிகள் நடைமுறைப் பரிப்புக்களின் கீழும் வியாபார சென்மதிகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u> :**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்களில் அதிக கவனத்தைச் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல முறை வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய சுய கற்றல் புத்தகங்கள், முன்னோடி வினாத்தாள்கள், செய்தி மடல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களை சரியாக இனங்காண்பதுடன், வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாகக் காட்டவும்.

**(7)** அதிகமான கடந்தகால வினாத்தாள்களைச் செய்துபார்த்து, அறிவை மேம்படுத்தவும்.

**(8)** நேரத்தை வினைத்திறனான வகையில் செலவழிக்கவும்.

**(9)** விடைத்தாளைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் அதியுயர் நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -